மாதம் இரு முறை வெளிவரும் இலவச இதழ். 18 பெப்ரவரி 2007 - 03 மார்ச் 2007. குரல் 10

லண்டன் குரல்
Voice of London Tamils

# பாரிஸ் ஈழநாடு பத்திரிகை ஆசிரியருக்கு கொலை மிரட்டல்

பாரிஸ் ஈழநாடு பத்திரிகை ஆசிரியருக்கு 'எல்லாளன் படை' என்ற குறிப்பிட்ட அமைப்பு கொலை மிரட்டல் விட்டுள்ளதாக பாரிஸிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் 'எல்லாளன் படை' என்ற அமைப்பு அரசியற் படுகொலைகளுக்கும் எச்சரிக்கைகளுக்கும் உரிமைகோரி இருந்தமை குறிப்பிடத்தக்கது. வி.புலிகள் சார்பு இணையத்தளமான 'நிதர்சனம்' குகநாதனுக்கு எதிரான தனிப்பட்ட தாக்குதலை ஆரம்பித்து உள்ளது.

பாரிஸில் ஊடகவியலாளர் சபாலிங்கம், ஈழநாடு ஆசிரியர் மற்றும் அவரது நண்பரும் படுகொலை செய்யப்பட்டது தெரிந்ததே. தற்போது எச்சரிக்கப்பட்டுள்ள குகநாதன் பாரிஸ் ஈழநாடு பத்திரிகையுடன் 'டான் தமிழ் ஒளி' யையும் நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. புலம்பெயர்ந்த ஊடகவியலாளர்களுக்கு கொலை மிரட்டல்கள் விடுக்கப்படுவது இது முதற்தடவை அல்ல என்ற போதும் 'எல்லாளன் படை' என்ற பெயரில் மிரட்டல் விடுக்கப்பட்டது இதுவே முதற் தடவை. ஆரம்ப காலங்களில் குகநாதன் வி.புலிகளுடன் மிகவும் நெருக்கமாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. பிற்காலங்களில் ஏற்பட்ட கசப்புணர்விற்கு வர்த்தகப் போட்டிகளே காரணம் என பரிஸ் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. இம்மிரட்டல்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் கருத்துச் சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்டுள்ள மிகப்பெரும் சவாலாக அமைந்துள்ளது.

Housing Benefit மோசடிக்கு ஓராண்டு சிறை 02
கடத்தல், சித்திரவதை, பாலியல் பலாத்காரம், சித்திரவதை பக்.03
தமிழ் - முஸ்லீம் இன உறவுகள் பக்.04
சிறிகந்தா லண்டனில் யாருக்குப் போதிக்கிறார் ஜனநாயகம் பக்.06

# வெளிநாட்டு ஏஜென்சிகளின் அடாவடித்தனம்! 19 தமிழர்கள் ஈராக் யுத்தமுனையில் அடைக்கப்பட்டனர்! ஸ்பெயின் கடலில் 10 தமிழர்கள் ஒருவாரம் தத்தளிப்பு!

வளைகுடாவில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாக அழைத்துச் செல்லப்பட்ட 19 பேரைக் கொண்ட இலங்கைத் தமிழ் இளைஞர் குழுவொன்று ஈராக்கில் ஐ.நா. அதிகாரிகளால் மீட்கப்பட்டு பெப்ரவரி 5ல் இலங்கைக்கு அனுப்பி வைக்கப் பட்டனர். ஐ.நா. அதிகாரிகளினால் மீட்கப்பட்ட இவர்கள் சர்வதேச குடிவரவு அமைப்பினால் (International Organisation of Migration IOM) பொறுப்பேற்கப்பட்டு பெப்ரவரி 4ல் ஜோர்டனுக்கு அனுப்பப்பட்டு இலங்கைக்கு மறுநாள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஈராக்கின் வடபுல நகரமான இர்பில் என்ற இடத்தில் தமது கடவுச் சீட்டுக்களையும், பணத்தையும் பறிகொடுத்து பாழடைந்த கட்டடமொன்றில் இந்தப் பத்தொன்பது இலங்கைத் தமிழர்களும் பயண முகவர்களால் சிறை வைக்கப்பட்டிருந்தனர். ஒரு மாதமாக போதிய உணவின்றி, சுகாதார வசதிகளோ, கழிப்பிட வசதிகளோ இன்றி இவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்ததாக IOM அமைப்பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஒவ்வொருவரும் தலா US $2000 அமெரிக்க டாலரை தமது வேலை வாய்ப்பிற்காக முகவர்களிடம் வழங்கியிருந்த போதிலும், முகவர்களால் இடை நடுவில் ஏமாற்றப்பட்டு ஈராக்கில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். தம்மை இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கக்கோரி ஆர்ப்பாட்டம் செய்த வேளையிலேயே அவர்களை இம்முகவர்கள் சிறை வைத்ததாக ஒருவர் குறிப்பிட்டார்.

தம்மைச் சிறைவைத்திருந்த ஒரு மாதமும் அடிக்கடி தம்மை இடம்மாற்றிக் கொண்டிருந்ததாகவும், ஒரு நாள் இத்தகைய பயணமொன்றின் போது அதிர்ஷ்டவசமாக ஐக்கிய நாடுகள் சபை வாகனமொன்றைக் கண்ணுற்று ஒருவர் அபயக் குரலெழுப்பி அவர்களது கவன ஈர்ப்பைப் பெற்றதாகத் தெரிவித்தார். பின்னர் தமது குழுவின் நிலையை எடுத்துச் சொன்னதன் பேரிலேயே அவர்கள் அனைவரும் ஈராக்கில் நிலைகொண்டுள்ள ஐ.நா. அதிகாரிகளால் மீட்கப்பட்டு சர்வதேச குடிவரவு அமைப்பிடம் கையளிக்கப்பட்டனர்.

மற்றுமொரு சம்பவத்தில் ஸ்பெயின் கடலில் தத்தளித்த இலங்கையர்கள் 10 பேர் பெப்ரவரி முற்பகுதியில் மீட்கப்பட்டு உள்ளனர். வடஆபிரிக்கக் கடற் பரப்பில் இருந்து சட்டவிரோதமான முறையில் ஐரோப்பாவிற்குள் நுழைய முயன்றனர் எனக் கூறப்படும் 10 இலங்கையர்கள் ஸ்பெயின் நாட்டுக் கடற்பகுதியில் தத்தளித்த நிலையில் கெலிஹொப்டர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு உள்ளனர்.

இலங்க உட்பட 372 ஆசிய நாட்டவர்களை ஏற்றிய மெரின் - 01 என்ற கப்பல் பெப்ரவரி முற்பகுதியில் ஒரு வாரகாலமாகக் கடலில் தத்தளித்த நிலையில் காணப்பட்டது. ஸ்பெயின் நாட்டு அதிகாரிகள் இவர்களைக் காப்பாற்றிக் கரை சேர்த்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



FSA அங்கீகாரத்துடன் அபிமானம் பெற்ற வங்கிகளுடன் இணைந்து
தனிப்பட்ட மற்றும் வியாபார நோக்கங்களுக்கான
'காட்' மூலமான துரித பணமாற்றுச் சேவை
குறைந்த செலவு & குறைந்த சிரமம்
0% கொமிஷன், ஒரு தடவை ATM மூலமாக பணம் பெற்றுக் கொள்வதற்கான செலவு £2.25 மட்டுமே. உலகெங்கும் 1,000,000 ATM இயந்திரங்கள் மூலமாக வாரத்தில் ஏழு நாட்களும் 24 மணி நேரமும் துரித சேவை.
உங்கள் 'காட்' மற்றும் pin இலக்கத்தைப் பெற்றுக் கொள்ள
தொடர்பு கொள்ளுங்கள் 0208 871 0485.
விநியோகஸ்தர்கள் UK முழுவதிலும் தேவை.
மேலதிக தகவல்களுக்கு 0207 871 0485.

உங்களின் குரல்! லண்டன் குரல்!! லண்டனில் எங்கும் கிடைக்கும் !!!
லண்டன் குரலை பெற்றுக் கொள்ளவும், நிறுவனங்களுக்கு இன்னும் அதிக பிரதிகள் வேண்டுமானாலும் தொடர்பு கொள்ள
020 8279 0354

உண்மைகள் உறங்குவதில்லை.

18 பெப் 07 - 03 மார்ச் 07, குரல் 10

லண்டன் குரல்

## தொடரும் படுகொலைகள்

இலங்கையின் வடக்கு கிழக்கில் தினமும் சராசரியாக ஐவர் வரை படுகொலை செய்யப்படுகிறார்கள். யாரும் யாரையும் கொலை செய்ய முடியும். ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயதானவர்கள், என்றெல்லாம் பேதமில்லை. கொலை செய்வதற்கு பெரிதாக ஒரு காரணத்தைத் தேடி அலைய வேண்டியதுமில்லை.

தமிழீழ விடுதலைப் போராட்டம் மிகவும் நியாயமானதாகவும் மிகுந்த அர்ப்பணிப்புடன் முன்னெடுக்கப்பட்ட போதிலும் மோசமான சகோதரப் படு கொலைகளையும் தன்னகத்தே கொண்டிருந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பத்துடனேயே உட்கட்சிப் படுகொலைகளும் ஆரம்பித்து விட்டது. ஸ்ரீலங்காவின் இனவாத அடக்குமுறை இராணுவத்துக்கு எதிராக மூர்க்கமாகப் போராடியவர்கள் அதிலும் மூர்க்கமாக தங்களுக்கு உள்ளேயும் மோதினர். முன்னாள் வி.புலிகள் உறுப்பினர்களும் இன்றைய கருணா குழுவினரும் ரீஆர்ஓ உறுப்பினர்களை படுகொலை செய்தமை தற்போதைக்கு சகோதரப் படுகொலைகள் நிறுத்தப்படப் போவதில்லை உறுதிப்படுத்துகிறது.

விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப் பட்டு மூன்று தசாப்தங்களாகியும் போராட்டத்தை தலைமை தாங்கியவர்கள் இச்செயல்களுக்காக வருந்தவுமில்லை. படிப்பினைகளைக் கற்றுக் கொள்ளவும் இல்லை. கடந்த 3 மூன்று தசாப்த காலம் தமிழீழ விடுதலை போராட்டத்துக்கு தலைமை தாங்கியவர்கள் ஆயுதங்களில் நம்பிக்கை வைத்த அளவுக்கு மக்களிடம் நம்பிக்கை வைக்கவில்லை. பிரதிநிதித்து வப்படுத்தவுமில்லை.அதனால் போராட்ட உணர்வும் கூர்மையடையவில்லை.

இன்று தமிழ் மக்கள் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகளிலும் பார்க்க இனம் தெரியாத தமிழ் இளைஞர்களுக்கே அதிகம் அஞ்சுகின்றனர். இராணுவம் கொலைகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்படும் போதும் அட்டகாசம் புரியும் போதும் அதனை ஜனநாயக வழிகளில் எதிர்க்க அன்றும் இன்றும் தமிழ் மக்கள் தயங்கியதில்லை. ஆனால் எமது இளைஞர்களுக்கே தமிழ் மக்கள் இன்று கூடுதலாக அஞ்சுகின்றனர்.

ஆசிரியர்: த ஜெயபாலன்
ஆசிரியர்குழு: Dr பி சிவக்குமார், ஆர் சுரேஸ்குமார், ஜோ ஜெயவேந்தன்
நிர்வாகம்: ரி கொன்ஸ்ரன்ரைன்

Voice of London Tamils
P O Box 35806
London, E11 3JX, UK

செய்தித் தொடர்பு: 020 8279 0354
நிர்வாகத் தொடர்பு: 079 1944 4994

‘லண்டன் குரல்’ பத்திரிகை Thesam Publication Ltd இனால் மாதமிரு முறை வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் ‘லண்டன் குரல்’ பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல் மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

# Housing Benefit மோசடிக்கு ஓராண்டு சிறை

தான் தங்கி உள்ள வீட்டு உரிமையாளர் தனது மகள் என்பதை மறைத்து ஹவுசிங் பெனிபிற் பெற்ற தந்தைக்கு இரு ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 12 மாத சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. பார்க் அவனியூவைச் சேர்ந்த சின்னக்கண்ணு சின்னையா என்பவர் கவுன்சிலிடம் தகவல்களை மறைத்து 22,000 பவுண் ஹவுசிங் பெனிபிற் மோசடி செய்ததாக ஐல்ஸ்வேர்த் கிறவுண் நீதிமன்றத்தில் குற்றம் நிருபிக்கப்பட்டது.

இவர் பொய்யான ஆவணங்களை கவுன்சிலுக்கு சமர்ப்பித்து மூன்று தடவைகள் கிடைத்த சந்தர்ப்பத்திலும் தனது வீட்டு உரிமையாளர் தனது மகள் என்பதை கவுன்சிலிடம் தெரிவிக்கத் தவறியதற்காகவே அவருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டு உள்ளது.

இத்தீர்ப்புப் பற்றி தெரிவித்த கவுன்சில் தலைவர் டேவிட் ஸ்கொட் கவுன்சிலின் பணத்தை களவாடபவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் அவர்கள் அப்பணத்தை மீளச் செலுத்த நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்தார். இந்த வில்லன்கள் கவுன்சிலின் பணத்தை மட்டும் களவாடவில்லை பலருக்கு கவுன்சிலால் கிடைக்க வேண்டிய சேவைகளையும் களவாடுகிறார்கள் என்று குற்றம்சாட்டினார்.

தன்மீதான குற்றச்சாட்டை மறுத்த சின்னையா தான் கவன்சிலை பிழையான வழியில் திசை திருப்பவில்லை என நீதிமன்றத்தில் தெரிவித்தார். தான் சில நண்பர்களின் உதவியுடனேயே விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்ததாகவும் அவர் தெரிவித்தார். இவருடன் ஐயர்லந்தைச் சேர்ந்த மரியா மற்றும் பிளெய்டர் டகோனா ஆகியோருக்கும் இதே குற்றத்திற்கு தண்டனை வழங்கப்பட்டது.

வயதான காலத்தில் அவர்களை வைத்து பராமரிக்க வேண்டியது அரசின் கடமை. அப்பொறுப்பை தட்டிக்கழித்து பிள்ளைகளிடம் சுமத்துவதால் தான் இவ்வாறான தவறுகள் இடம்பெறுகின்றது என்கிறார் ஈஸ்ற்காமைச் சேர்ந்த நடராஜா (50). அவர் மேலும் தெரிவிக்கையில் வயதான காலத்தில் விண்ணப்பங்கள் அது இது என்று கஸ்டப்படுத்துவது எப்படி நியாயமாகும். கவுன்சில் எங்களைப் போன்ற வயதானவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் உபத்திரவமாக இருக்கக் கூடாது என்றும் நடராஜா தெரிவித்தார்.

மோசமான குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களையே தடுத்து வைக்க சிறையில் இடமில்லாத போது இச்சிறு குற்றங்களுக்கு ஓராண்டு தண்டனை என்பது அவசியமற்றது என்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத பொது அமைப்பு ஒன்றின் பணியாளர். அரசு மக்கள் உணர்வுகளை மதிப்பதாக இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# பாலியல் வன்முறை முறையீடுகளில் பொலிசார் அசமந்தம்

ஐக்கிய இராச்சியத்தில் பாலியல் வன்முறை தொடர்பாக மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளை பொலிசார் மேல்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது, பாரிய குற்றச்செயலாகப் பதியாமல் விடும்போக்கு அதிகரித்திருப்பதாக Watch Dog அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன. அண்மைக்காலத்தில் அமுலாக்கப்பட்ட பெண்கள் மீதான பாலியல் வன்முறை தொடர்பான சட்ட திட்டங்களில் பாலியல் வன்முறைக்குள்ளான பெண்களின் முறைப்பாடுகளின்பேரில் குற்றவாளிகளை கைதுசெய்து தண்டணை வழங்கும் வாய்ப்பு அதிகரிக்கும் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் பொலிசார் இத்தகைய முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் போக்கில் ஏற்பட்டுள்ள அசமந்தப்போக்கினால், பெரும்பான்மையான முறைப்பாடுகளின் பேரில் குற்றவாளிகளைத் தேடிக்கண்டு பிடிக்கும் முயற்சி பெரும்பாலும் மேற்கொள்ளப்படுவதில்லை. பாலியல் வன்செயல் முறைப்பாடுகளைப் பதிவுசெய்யும் பொலிசார் தவறாக நோ கிரைம் என்ற பதத்தை அதிக அளவில் பாவிப்பதால் மேலதிக விசாரணை தடைப்பட்டுப் போய்விடுவதாக பொலிஸ் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது 5 சதவீதமாகப் பதிவு செய்யப்படும் பாலியல் வன்முறை தொடர்பான முறைப்பாடுகளில் இதனால் எவ்வித அதிகரிப்பும் காணப்படவில்லை என்ற செய்தி பெண்களின் மீதான வன்முறைக்கு எதிராக நீண்டகாலமாகப் போராடி சட்டத்தில் மாற்றம் கொண்டுவந்த பல பாராளுமன்றப் பிரதிநிதிகளை ஆத்திரமடையச்செய்துள்ளது.

# மோசமான மருத்துவகளின் பட்டியல்

மோசமான செயற்பாடுகளுக்கான புகார்களைச் சந்திக்கும் முதல் பத்து தேசிய மருத்துவத்துறை நம்பிக்கை நிதியங்களின் (NHS Trust) பட்டியலில் செஸ்டர்பீல்ட் ரோயல் வைத்திய சாலை முன்னணியில் நிற்கின்றது. அதிக முறைப்பாடுகளை பெறும் நிதியமாகவும் அதிகுறைந்த அளவில் அவற்றை விசாரிக்கும் நிதியமாகவும் இது குறிப்பிடப்படுகின்றது.

# கோர்ட்டில் குற்றப்பணம் செலுத்தும் முறையில் விரைவில் மாற்றம்

குற்றமிழைத்த ஒருவரிடம் நீதிமன்றம் அறவிடும் குற்றப்பணத்தை மூன்றில் ஒரு பங்கினரே உரிய காலத்தில் செலுத்துவதாக அண்மைய நீதித்துறைக் கணிப்பீடு ஒன்று தெரிவித்துள்ளது. மூன்றில் இரண்டு பங்கினர் அதைச் செலுத்துவதற்கு நீண்டகாலம் எடுத்துக்கொள்வதாகவும், இதில் பெரும்பாலானோர் நீதிமன்ற எச்சரிக்கைக் கடிதங்களுக்குப் பின்னரே அதை செலுத்த முற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு மாற்றாக, தண்டப்பணம் விதிக்கப்பட்ட அன்றே குற்றப்பணத்தைச் செலுத்த வேண்டும் என்றும், தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் அப்பணத்திற்கான வட்டியும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்றும் விரைவில் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது. 2004-2005 ம் ஆண்டு காலப்பகுதியில், இங்கிலாந்து, வேல்ஸ் நீதிமன்றங்கள் மட்டும் 350 மில்லியன் குற்றப்பணம் அறவிடத் தீர்க்கப்பட்டதாகவும் அதில் 5சதவீதமே உரிய காலக்கெடுவுக்குள் செலுத்தப்பட்டுள்ளதாகவும் இது பற்றிய அறிக்கை மேலும் கூறுகின்றது.

# வீடுகள் மீளக்கையேற்கும் வீதம் அதிகரிப்பு

வீட்டுக் கடனைக் கட்டும் வசதியற்றோரின் வீடுகளை மீளக் கையகப்படுத்தும் (repossess) வீதம் 65 சதவீதத்தால் சடுதியாக அதிகரித்து உள்ளது. வட்டிவீத அதிகரிப்பும், வேலையற்றோர் தொகை அதிகரிப்பும், வானை எட்டும் வீட்டு விலையுமே இதன் காரணம் என்று அறிக்கைகள் கூறுகின்றன. கடந்த ஆண்டு மட்டும் 17,000 வீடுகள் மீளக்கையேற்கப்பட்டு உள்ளன என்று புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. நாளொன்றுக்கு 50 வீடுகள் என்ற ரீதியில் நாடெங்கும் வீட்டு உரிமையாளர்கள் தமது வீடுகளை இழந்துவருகின்றனர். அடுத்த ஆண்டு 20000 வீடுகள் வரை கையகப்படுத்தப்படலாம் என்று தற்போதைய நிலவரங்களை வைத்து கணிப்பிடப்பட்டுள்ளது.

# கே.எப்.சி பற்றிய அதிர்ச்சித் தகவல்

கெண்டக்கி பிரைட் சிக்கன் விரைவு உணவு நிறுவனம் தன் பெயரை கே.எப்.சி என்று மாற்றிக்கொண்டுள்ளதன் காரணம் அண்மையில் கசிந்துள்ளது. Deidre Williams என்ற அமெரிக்கர் இத்திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளார். இந்த நிறுவனம் முறையாகப் பிறந்து வளரும் கோழிகளை தமது உணவுத்தயாரிப்பில் ஈடுபடுத்தாததையடுத்து அமெரிக்க அரசு சிக்கன் என்ற பெயரை இந்த நிறுவனத்தின் விளம்பரங்களிலோ, மெனுக்களிலோ பாவிப்பதை சட்டபூர்வமாகத் தடைசெய்திருக்கிறது. பரிசோதனைச்சாலையில் பாரிய அளவில் மரபீனி மாற்றத் தொழில்நுட்பத்தின்



(Genetically modified) மூலம் உருவாக்கப்படும் கோழிகளையே இந்நிறுவனம் பயன்படுத்திவருகின்றது. இங்கு உருவாகி எமது வயிற்றுக்கள் சுவையுணவாக இறங்கும் ‘கோழி‘ எலும்புவளர்ச்சி தடுக்கப்பட்டு கால்கள், இறகுகளற்ற சதைப்பிண்டங்களாக பாரிய அளவில் மரபீனி மாற்றத் தொழில்நுட்பத்தின் விளைச்சலாக உருவாகுபவையே என்று அண்மையில் அமெரிக்காவின் நியு ஹம்ஷெயார் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வொன்றில் திடுக்கிடும் தகவல் வெளியிடப்பட்டு உள்ளது.

படம்: இது கோழி அல்ல கே.ப்.சி கோழி

# கடத்தல், சித்திரவதை, பாலியல் பலாத்காரம், படுகொலை

## தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்களின் கோரமுடிவு

கடந்த ஆண்டு ஜனவரி 29, 30ல் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள் ஏழுவர் சித்திரவதை, பாலியல் பலாத்காரம் ஆகியவற்றுக்குப் பின் கருணா குழுவினரால் படுகொலை செய்யப்பட்டதாக நம்பப்படுகிறது. ரிஆர்ஓ புலிகளுடன் தொடர்புடைய அமைப்பு என்பது எல்லோரும் அறிந்த இரகசியம் என்பதால் இச்சம்பவம் குறைத்தே மதிப்பிடப்பட்டது. அதில் பணியாற்றிய பொது ஊழியர்களும் புலிகளாகவே பார்க்கப்படும் போக்க இருப்பதால் இச்சம்பவம் அதற்கு வேண்டிய செய்திப் பரப்பை பெறவில்லை.



தமக்கு கிடைத்த தகவல்களும் அதனை உறுதிப்படுத்துவதாக குறிபட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர் டொக்டர் மூர்த்தி குற்றவியல் ஆதாரங்களுக்காக காத்திருப்பதாகத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு பெப்ரவரி 26ல் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி இவர்களது நிலை தொடர்பாக ஆராய்ந்தது. தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள் செல்வரட்ணம், ரட்ணசபாபதி, குகச்சந்திரன், டொக்டர் மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள் கடத்தப்பட்ட சம்பவம் சர்வதேச கண்டனத்தை பெற்றுக் கொள்ளாமைக்கான காரணங்கள் ஆராயப்பட்டது. அதற்கு மூன்றாம் உலக நாடுகளில் உயிரின் மதிப்பு எப்போதும் குறைத்தே மதிப்பிடப்படு வதாக ஒரு பேப்பர் ஆசிரியர் கோபிநாத் (படம் வலம்) தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ் ஊடகங்கள் இதனை சர்வதேசமயப்படுத்தும் அளவிற்கோ அல்லது தாக்கத்தை ஏற்படுத்தும் அளவிற்கோ வலுவான நிலையில் இல்லை எனத் தெரிவித்தார். அவரது கூற்றை பெரும்பாலான ஊடகவியலாளர்கள் ஏற்றுக்கொண்டனர். இவ்வாறான பொது விடயங்களில் ஊடகங்களின் ஒத்துழைப்பை தாம் எதிர்பார்ப்பதாக டொக்டர் மூர்த்தி அப்போது தெரிவித்திருந்தார்.

கனடாவை தளமாகக் கொண்டு இயங்கும் ஊடகவியலாளர் டிபிஎஸ் ஜெயராஜ் தனது The tragic fate of TRO employees abducted by Karuna cadres என்ற கட்டுரையில் கடத்திச்செல்லப்பட்டவர்கள் சித்திரவதை, பாலியல் பலாத்காரம் ஆகியவற்றுக்குப் பின் கருணா குழுவினரால் படுகொலை செய்யப்பட்டதாக எழுதி உள்ளார். இந்த கோர நிகழ்வின் போது கருணா குழுவுடன் இருந்து இவற்றை பொறுத்துக் கொள்ள இயலாது வெளியேறிய சில முன்னாள் உறுப்பினர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே இக்கட்டுரை எழுதப்பட்டு உள்ளது. அண்மையில் வெளிவந்துள்ள சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் அறிக்கைகளிலும் சிறுவர்களை பலாத்காரமாக படைகளில் சேர்ப்பது, வெள்ளை வான் கடத்தல்கள் மற்றும் படுகொலைகளிலும் கருணா குழு ஈடுபட்டிருப்பது சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.



பொட்டு அம்மானின் உளவுப் பிரிவினர் ரிஆர்ஓ மூலம் தகவல்கள் சேகரிக்கிறார்கள் என்று ஆரம்பித்த கருணா குழுவின் மோசமான விசாரணை மனிதநேயமற்ற சகோதரப் படுகொலைகளில் முடிவடைந்து உள்ளது.

காசிநாதர் கணேசலிங்கம் (North East ProvienceSecretary of Pre-School Education Development Centre) தெல்லிப்பளை, கதிர்காமர் தங்கராசா (சாரதி) கிளிநொச்சி, அருனேஸ்வரராஜா சதீஸ்வரன் (பயிற்சிக் கணக்காளர் - ரிஆர்ஓ) வெள்ளாவெளி, கயிலாயபிள்ளை ரவிந்திரன் (கணக்காளர் - விபுலானந்த சிறவர் இல்லம்) பழுகாமம், சண்முகநாதன் சுஜீந்திரன் (கணக்காளர் - மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்) சந்திவெளி, தம்பிராஜா வசந்தராஜா (கணக்காளர் - ரிஆர்ஓ மட்டக்களப்பு), பிரேமினி தனுஸ்கோடி ரிஆர்ஓ கிழக்கு மாகாண தலைமைக் கணக்காளர் ஆகியோரே கடந்த ஆண்டு கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். கருணா குழுவினரால் கடத்தப்பட்டு தீவுச்சேனை என்ற இடத்தில் தடுத்து வைக்கப்பட்ட இவர்கள் அங்கு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாக வெளியேறிய உறுப்பினர்கள் கூறியுள்ளனர்.

முதலிருவரான வடக்கைச் சேர்ந்த கணேசலிங்கம், தங்கராசா ஆகியோர் முதலில் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஏனைய ஆண்கள் நால்வரும் காட்டுக்குள் அழைத்துச் செல்லப்பட்டு பெரிய கிடங்கு ஒன்றை வெட்டுமாறு பணிக்கப்பட்டதாகவும் அவர்கள் நால்வரும் கண்ணீருடன் கிடங்கை வெட்டி முடிந்ததும் சுட்டுக் கொல்லப்பட்டு அக்கிடங்கினுள்ளேயே தாக்கப்பட்டதாகவும் வெளியேறிய அந்த உறுப்பினரகள் தெரிவித்து உள்ளனர்.

பிரேமினியின் கதை இன்னும் சோகமானதாயும் மோசமானதாயும்



அமைந்தது. இந்த இளம் பெண் தீவுச்சேனையில் இருந்து வேறொரு முகாமுக்கு மாற்றப்பட்டார். அங்கு கருணா குழுவினரின் பொறுப்பாளராலும் பின்னர் அக்குழவைச் சேர்ந்த 14 உறுப்பினர்களாலும் கூட்டுப் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டார். ஆரம்பத்தில் கதறி அழுத இவர் நேரம் செல்லச் செல்ல சக்தியற்று மயங்கினார். அவரை காட்டுக்குள் நடத்திச் சென்றபோது எவ்வித உணர்ச்சியுமின்றி நடைப்பிணமாக இருந்ததாக வெளியேறிய உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவரை அக்காட்டில் வைத்து வெட்டி புதரிற்குள் வீசியதாக அவ்வுறுப்பினர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். அக்குழுவில் இருந்த அனைவருமே இந்நடவடிக்கைகளில் உடன்படாவிட்டாலும் அவர்களால் இக்கொடும்செயலில் ஈடுபட்டவர்களை மீறி எதையும் செய்ய முடியவில்லை என்றும் வெளியேறிய அவ்வுறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் கூறுகையில் இவற்றை வெளிக்கொண்டுவர முயற்சித்த நல்லெண்ணம் கொண்ட சிங்கள இராணுவ புலனாய்வாளர் ஒருவரும் கருணா குழுவால் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தனர்.

இச்சம்பவம் மட்டுமல்லாமல் பணத்திற்காக வர்த்தகர்களைக் கடத்துவது, பா உ ஜோசப் பரராஜசிங்கத்தை கொலை செய்தது, ஓமந்தியமடுவில் சிங்கள பணியாட்களை கொலை செய்தது போன்றவற்றையும் கருணா குழுவே செய்ததாக அதிலிருந்த வெளியேறிய உறுப்பினர்கள் தெரிவித்து உள்ளனர்.

கருணா குழுவின் இராணுவத் தளபதி பிள்ளையான், சிந்துஜன் (பார்த்தீபன்) - கடத்தல் குழுவுக்கு தலைமை தாங்கியவர், ஜெயந்தன், குமார், புலேந்திரன், சிரஞ்சீவி, யோகன் (கடத்திய கருணா குழு உறுப்பினர்கள்), உளவுப் பிரிவுப் பொறுப்பாளர் சிதா (பிரதீப்), சச்சி (சாந்தன்), ஜீவா (திலகன்) ஆகியோரே இப்பாதகச் செயலில் சம்பந்தப்பட்டதாக டிபிஎஸ் ஜெயராஜ் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

கருணா குழுவினரை அம்பலப்படுத்துவதன் மூலம் புலிகள் சாதுக்கள் அல்ல என்று குறிப்பிட்டுள்ள கட்டுரையாளர் புலிகள் எண்ணற்ற மனிதஉரிமை மீறல்களைச் செய்துள்ளமை பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று என்றும் குறிப்பிட்டுள்ளார். ரீஆர்ஓ உறுப்பினர்களுக்கும் ஏன் புலி உறுப்பினர்களுக்குமே அவர்களுக்கான அடிப்படை உரிமைகளை மறுக்க முடியாது என்பதை கட்டுரையாளர் சுட்டிக்காட்டி உள்ளார்.

# கட்டாரில் 5 இலங்கைத் தமிழருக்கு மரணதண்டனை

கடந்த ஆண்டு ஏறாவூர் மட்டக்களப்பைச் சேர்ந்த குருவி என்றழைக்கப்படும் மனோகரன் (25) என்ற இளைஞரைப் படுகொலை செய்ததற்காக கட்டார் நீதிமன்றம் ஐந்து இலங்கைத் தமிழர்களுக்கு மரண தண்டனை விதித்துள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த மனோகரன் அவ்வமைப்பில் ஏற்பட்ட பிளவின் பின் கருண அணிக்கு ஆதரவாக இருந்தவர். இந்த அரசியல் காரணங்களுக்காகவே இவர் கொல்லப்பட்டதாக பொலிஸ் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவரது அறையில் நித்திரையில் இருந்த போது உள்ளே புகுந்த மூவர் இரும்புக்குத்தியால் தலையில் பல தடவை அடித்துவிட்டு இறந்துவிட்டார் என எண்ணி வெளியேறினர். தாக்குதல் நடக்கும் போது விழித்துக்கொண்ட மனோகரனின் நண்பர்களை தாங்கள் விடுதலைப் புலிகள் என்றும் சத்தம் போட்டால் அவர்களையும் கொன்றுவிடுவோம் என்றும் மிரட்டியதாக அதில் ஒருவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மனோகரன் அவருக்கு ஏற்பட்ட காயங்களால் ஒரு வாரத்தில் உயிரிழந்தார்.

குற்றச்சாட்டப்பட்டவர்களில் முதலாம், இரண்டாம், நான்காம் குற்றவாளிகள் மூவரும் கொலையில் நேரடியாக ஈடுபட்டனர். நான்காவது குற்றவாளி அவர்களுக்கான போக்குவரத்தையும் வழங்கி உள்ளார். இவரது காரில் இருந்து கொலை செய்யப் பயன்படுத்திய இரும்புக்குத்திகள், இரு சோடி கையுறைகள், இரு முகமூடிகள் என்பனவற்றை பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் கைப்பற்றினர். மூன்றாவது குற்றவாளி அறைக்கு வெளியே காவலுக்கு நின்றதாக குற்றம்சாட்டப்பட்டார். இவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டு நீதின்றத்தில் நிறுத்தப்பட்டனர்.

ஐந்தாவது குற்றவாளியே இக்கொலையைத் திட்டமிட்டதாக கட்டார் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இக்குற்றவாளி கொலை இடம்பெறுவதற்கு சற்று முன் கட்டாரிற்கு வந்துவிட்டு கொலை இடம்பெற்ற சில தினங்களில் அங்கிருந்து வெளியேறிவிட்டார். இக்குற்றவாளி மனோகரனின் அறைக்கு அடுத்த அறையில் தங்கி மனோகரனின் நடமாட்டங்களை கவனித்து தகவல் வழங்கி உள்ளார். இவர் நீதிமன்றத்தில் நிறுத்தப்படாமலேயே தண்டனை வழங்கப்பட்டது. இவரை நாடு கடத்தும் படி இலங்கை அரசிடம் கட்டார் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்வழக்கு நேரடியாக தற்போது மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. அங்கு குற்றவாளிகளின் மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டால் அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும்.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

# கருத்தரங்கு: தமிழ் - முஸ்லீம் இன உறவுகள்

தமிழ்-முஸ்லீம் இன உறவுகள் என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று கிழக்கு லண்டன் வோல்தம்ஸ்ரோ வை.எம்.சி.ஏ இல் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. தேசம் சஞ்சிகையினால் மார்ச் 10, மாலை 3 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் - முஸ்லீம் உறவுகள் என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று கிழக்கு லண்டன் வோல்தம்ஸ்ரோ வை.எம்.சி.ஏ இல் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. தேசம் சஞ்சிகையினால் மார்ச் 10, மாலை 3 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ் - முஸ்லீம் மக்கள் புவியியல் ரீதியாக ஒருவரோடு ஒருவர் உறவாடி வாழ வேண்டிய கட்டாயத்தில் இருந்த போதும் புறச்சூழல் அவர்களை பகைமையுடனும் சந்தேகத்துடனும் நம்பிக்கையீனத்துடனும் வாழ நிர்ப்பந்தித்து உள்ளது. தமிழ் - முஸ்லீம் இன உறவுகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியுடன் சிதைவடைய ஆரம்பித்துவிட்டது.

காலத்திற்குக் காலம் முஸ்லீம் சமூகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட ஒடுக்குமுறைகள் எழுந்தமானமான தனிமனித தாக்குதல்களில் ஆரம்பித்து திட்டமிட்ட இன அழிப்பு, இனச் சுத்திகரிப்பு என்ற பரிமாணத்தைப் பெற்றது. இன்று தமிழ் - முஸ்லீம் இன உறவுகள் அதன் அடி நிலையிலேயே உள்ளது. இந்த நிலையை மாற்றியமைப்பது மிகவும் கடினமானதாக இருந்தாலும் இரு இனங்களினதும் எதிர்காலத்திற்கு இந்நிலை மாற்றி அமைக்கப்படுவது தவிர்க்க முடியாதது.

இந்த கடினமான பாதையை செப்பனிடுவதில் ஒரு காத்திரமான பங்களிப்பை செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலேயே 'தமிழ் - முஸ்லீம் இன உறவுகள்' என்ற தலைப்பிலான சந்திப்பு மார்ச் 10ல் ஏற்பாடு செய்யப்பட்டது. அதையொட்டி 'தமிழ் - முஸ்லீம் இன உறவுகள்' என்ற இந்த சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படுகிறது என விழா ஏற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தமிழ் - முஸ்லீம் இன உறவுகளை வலுப்படுத்துவதற்கு, அதைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு, அதை நோக்கிய நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு இச்சந்திப்போ இந்த சிறப்பு மலரோ உதவுமாக இருந்தால் அது 'தேசம்' சஞ்சிகைக்கும் அதன் வாசகர்களுக்கும் கிடைத்த வெற்றியாக அமையும் என்கிறனர் விழா ஏற்பாட்டாளர்கள்.

முஸ்லீம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், தமிழ் இயக்கங்களும் முஸ்லீம் மக்களும், தமிழ் - முஸ்லீம் தேசியவாதம், இலங்கையின் வடக்கு கிழக்கில் முஸ்லீம்களின் எதிர்காலம் மற்றும் வெவ்வேறு தலைப்புகளில் மூவினத்தைச் சேர்ந்த பேச்சாளர்களும் ஆய்வுகளை மேற்கொள்வார்கள்.

இக்கலந்துரையாடலில் ஆய்வுகளை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் 020 8279 0354 அல்லது 07800 596 786 என்ற தொடர்பு இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# விடுதலைச் சிறுத்தைகள் எம் எல் ஏ ரவிக்குமார் மீதான தாக்குதலும் அதன் பின்னுள்ள அரசியலும்

விடுதலைச் சிறுத்தைகளின் கட்சியின் காட்டு மன்னார் கோயிலின் சட்டமன்ற உறுப்பினரான ரவிக்குமார் மீது கடந்த மாதம் புத்தாண்டு தினத்திற்கு மறுநாள் காவல்துறையினர் கண்மூடித்தனமாக தாக்குதலை நடத்தியுள்ளனர்.

## சம்பவம்

புத்தாண்டு தினத்தன்று வன்னிய சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் கடலூர் அரசு மருத்துவமனைக்கு அவசரமாக சிகிச்சைக்கு ஆட்டோவில் வந்தவர்களை நிறுத்தி ஹப்பி நியூ இயர் சொல்ல வலியுறுத்தினர். அப்போது ஏற்பட்ட வாக்குவாதத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த சிவா என்பவரை வன்னிய சமுதாய இளைஞர்கள் தாக்கியதில் சிவாவுக்கு தலையில் படுகாயம் ஏற்பட்டுள்ளது. பிறகு இவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பயனளிக்காத நிலையில் புதுச்சேரி மருத்துவமனையில்



இறந்துவிட்டார்.

இறந்துபோன சிவாவின் குடும்பத்துக்கு உதவவும் இவரது மரணத்துக்கு காரணமானவர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கும் படியும் முதல்வர் முதல் மாவட்ட ஆட்சியாளர் வரை, சட்டமன்ற உறுப்பினர் ரவிக்குமார் அணுகியதன் விளைவாக அங்கு மிகப்பெரும் சாதிய மோதல் தவிர்க்கப்பட்டது.

இந்நிலையில் சிவாவின் இறுதி ஊர்வலத்தின் போது சில விஷமிகள் கல் எறிந்ததை அடுத்து காவல் துறையினர் ஊர்வலத்திற்கு வந்தவர்கள் மீதும் தடிஅடி நடத்தியுள்ளனர். இதில் எம்எல்ஏ ரவிக்குமார் உட்பட அவரது கட்சிப் பொறுப்பாளர்களையும் காவல்துறையினர் தாக்கியுள்ளதுடன் தகாத வார்த்தைகளால் திட்டியும் உள்ளனர்.


படுகாயம் அடைந்த ரவிக்குமார் பின்பு விடுவிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துள்ளார். சாதி உணர்வோடும் அரசாங்கத்துக்கு கெட்ட பெயர் உருவாக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடும் காவல்துறை செயல்பட்டுள்ளதாக ரவிக்குமார் குற்றம் சாட்டியுள்ளார்.

## ரவிக்குமார் மீதான தாக்குதல் ஏன்?

கவிஞரும் எழுத்தாளரும் மொழி பெயர்ப்பாளரும் என பல்வேறு பரிமாணங்களுடைய ரவிக்குமார் ஒடுக்கப்பட்ட தலித் இனத்திலிருந்து வளர்ந்து வந்த சமூக மாற்றத்தை விரும்ப கூடிய அறிவுஜீவி ஆவார். குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக தலித் மக்களின் எழுச்சி என்பது மிகப்பெரும் வளர்ச்சியை அடைந்துள்ளது. குறிப்பாக ரவிக்குமாரின் எழுத்துக்கள் பல்வேறு விதத்தில் முரண்பட்டாலும் அது தமிழகத்தில் மிகப்பெரும் விவாதத்தை (பெரியார் பற்றி) ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தில் தாத்தா இரட்டை மலை சீனிவாசனுக்கு பின்பு தலித் தலைவர்களில் ஒருவரான அயோத்தி தாசர் வரலாறுகளை வெளிக்கொண்டு வந்து தற்போது அவரது பெயரை தாம்பரம் அரசு மருத்துவமனைக்கு சூட்டி கௌரவப்படுத்தியதில் விடுதலைச் சிறுத்தைகளுக்கும் ரவிக்குமாருக்கும் பங்குண்டு.

மேலும் இடதுசாரி அமைப்புகளில் செயல்பட்டு பின் பல்வேறு கருத்து வேறுபாடுகளால் இறுதியில் விடுதலைச் சிறுத்தைகளின் அமைப்புக்கு ஆலோசகராக செயல்பட்டு இறுதியில் எம்.எல்.ஏ ஆகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். தற்போது பல்வேறு வார இதழ்களிலும் சிற்றிதழ்களிலும் கட்டுரைகளை எழுதி வருகிறார்.

ஈழத்தமிழர் போராட்டத்தில் பொதுச் செயலாளர் திருமாவளவன் உணர்ச்சி வசப்பட்டு எடுக்கும் முடிவுகளில் இருந்து ரவிக்குமார் விமர்சனபூர்வமான பார்வையுடன் அணுகுவதால் இவருடைய அணுகுமுறை பல்வேறு மட்டங்களில் பேசப்படும் விதமாக மாறியுள்ளது. மேலும் அகதிகள் பற்றி தமிழக அரசுக்கு அளித்த அறிக்கை தனது



கன்னிப்பேச்சில் ஈழத்தமிழர்கள் பற்றிய அணுகுமுறையில் அரசின் பார்வையை விளக்கி பேசியுள்ளார்.

மேலும் தலித் இன மக்களின் உரிமைக்காகவும் தி.மு.க கூட்டணியுடன் இணைந்து செயல்பட காரணமாகவும் இருந்துள்ளார். தமிழக முதல்வருக்கு மிகவும் நெருக்கமானவராக இருப்பதுடன் அவரது சட்டமன்ற தொகுதிகளில் உள்ள பிரச்சனைகளை உடனுக்குடன் தீர்த்துக்கொள்ளவும் மேலிடங்களில் உள்ள தொடர்பும் உயர்சாதி அதிகார வட்டாரங்களில் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. இறந்துபோன சிவாவுக்கு 2 லட்சம் ரூபாயை முதல்வருடன் பேசி உடனடியாக பெற்றுக் கொடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சூழலில் அப்பகுதி காவல்துறை அதிகாரிகளில் வன்னிய சமூகத்தினர் உயர்பதவியில் இருப்பது என்பதும் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் வாழும் இப்பகுதிகளில் ஏற்படும் சாதிய மோதல்களில் உயர்சாதி காவல்துறையினரின் அராஜக போக்கிற்கு தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிப்புக்குள்ளாவதும் என்பது தொடரும் போக்காக உள்ளது. 1999ல் கடலூரில் திருமாவளவன் போட்டியிட்ட போதும் இதுபோலவே காவல்துறையினரின் அராஜகம் அரங்கேறியுள்ளது.

## காவல்துறையின் துஸ்பிரயோகம்

பொதுவாகவே அதிகாரத்தின் உச்சியில் இருக்கும் காவல்துறை (வரைமுறையற்ற அதிகாரம்) நிராயுதபாணியான மக்கள் மீது தொடுத்த அடக்குமுறை என்பது தொடர்ந்து இருந்துவருகின்றது. வீரப்பன் தேடுதல் வேட்டையில் அப்பகுதி பழங்குடிகள் (லம்பாடிகள்) பாலியல் சித்திரவதைகளுக்கும் படுகொலைகளுக்கும் ஆளானது பதிவுகளாகவே உள்ளது. இதுவரை எந்த காவல்துறையினரும் தண்டிக்கப்பட வில்லை.

எந்த அரசும் அதிகாரத்துக்கு வந்த்வுடன் காவல் துறையை சுதந்திரமாக செயல்பட அனுமதி வழங்குகின்றது. அதன் விளைவாகத் தான் கட்டமைக்கப்பட்ட பிரச்சாரத்தின் மூலம் போலி மோதல் பெயரில் படுகொலைகளை செய்துவிட்டு அதை நியாயப்படுத்தி அறிக்கைகளும் பேட்டிகளும் விடும் காவல்துறையினர் குற்றஉணர்வின்றி நடமாடுகின்றனர். அரசும் இந்த அதிகாரிகளை பாதுகாக்கவே செய்கிறது.

கொடியன்குளம் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான காவல்துறையினர் நடத்திய அராஜகம் உலகம் அறிந்தது. அப்போதைய ஜெயலலிதா அரசு முன்னின்று நடத்திய அரசு வன்முறை அது. ஆனால் திருமாவளவன் ஜெயலலிதாவை சந்தித்துவிட்டு வந்தபோது அது அரசின் கவனத்திற்கு வராத காவல்துறையின் வன்முறை என்று ஜெயலலிதா கூறியதை திரும்ப கூறினார். அதே போல் தான் மேலவளவு, தாமரபரணி படுகொலை என பட்டியல் நீள்கிறது.

தமிழக அரசுடன் இணைந்து செயல்படும் ரவிக்குமார் கூட கூட்டணி தர்மத்திற்காக காவல்துறையை மட்டும் குற்றம் சாட்டியுள்ளார். ஆனால் அதை இயக்கவைக்கும் கருணாநிதி அரசுக்கும். ரவிக்குமார் மீதான தாக்குதலில் பங்குள்ளது என்பது மறைக்கப்பட்டாலும் ஒடுக்கப்பட்ட மக்களின் மீதான அரசின் பாசிச செயல்பாடு அம்பலம் ஆகும் காலம் வெகுதூரம் இல்லை என்பது உண்மையாகும். ரவிக்குமார் மீதான தாக்குதலை அகதிகள் புணர்வாழ்வு மற்றும் மனித உரிமைக்கான இயக்கம் வன்மையாகக் கண்டித்து உள்ளது. (படங்கள்: கால்ச்சுவடு இணையச் சஞ்சிகை )

**உண்மைகள் உறங்குவதில்லை.**

# லண்டன் தமிழர்களை குழப்பும் நாட்காட்டிகள்

நடந்து முடிந்த சிவராத்திரி, தைப்பொங்கல் விழாக்களை சைவ முன்னேற்றச் சங்கம் ஜனவரி 1இலும் பெப்ரவரி 15இலும் கொண்டாடியது. ஆனால் சைவ முன்னேற்றச்சங்க உறுப்பினரான இல்பேர்ட் செல்வராஜாவின் செல்வ விநாயகர் ஆலயத்தில் ஜனவரி 15ல் தைப்பொங்கலும் சிவராத்திரி பெப்ரவரி 16இலும் கொண்டாடப்பட்டது. இந்த திகதி மாற்றம் பற்றி பலரும் குறைப்பட்டுக் கொள்கின்றனர். இது பற்றி முன்னர் பல தடவைகள் விவாதிக்கப்பட்டு தற்போது 20 ஆலயங்கள் வரை ஒரே தினத்தில் விசேட தினங்களைக் கொணடாடுகின்றனர். சைவ முன்னேற்றச் சங்கமும் ஒரே கலண்டரை சைவ ஆலயங்கள் பின்பற்ற வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தது. தைப்பொங்கல், சிவராத்திரி மட்டுமல்ல இனிவரப்போகும் நவராத்திரி, தீபாவளி மற்றும் பல்வேறு தினங்களும் இதில் பிரச்சினைக்குள்ளாகி உள்ளது.

சைவமுன்னேற்றச்சங்கமும் 20 ஆலயங்களும் ஒரு திகதியிலும் ஈஸ்ற்ஹாம் முருகன் கோவில், மகாலஷ்மி கோவில், இல்பேர்ட் செல்வ விநாயகர் கோவில் என்பன மறுநாளும் இவ்விழாக்களைக் கொண்டாடுகின்றன. சைவமுன்னேற்றச் சங்கமும் 20 ஆலயங்களும் நவராத்திரியை ஒக்ரோபர் 11இல் கொண்டாடுகின்றனர். ஆனால் ஈஸ்ற்ஹாம் முருகன் கோவில், மகாலஷ்மி கோவில், இல்பேர்ட் செல்வ விநாயகர் கோவில் என்பன நவராத்திரியை ஒக்ரோபர் 12இல் கொண்டாடுகின்றனர்.

இதற்கான காரணம் சைவமுன்னேற்றச் சங்கமும் 20 ஆலயங்களும் இங்கிலாந்து நேரப்படி கணித்த வாக்கிய திருக்கணித நாட்காட்டிகளை பின்பற்றுகின்றன. ஈஸ்ற் ஹாம் முருகன் கோவில், மகாலஷ்மி கோவில் என்பன இந்திய நேரப்படி கணித்த நாட்காட்டிகளை பின்பற்றுகின்றன. ஆனால் இல்பேர்ட் செல்வவிநாயகர் கோவில் தைப்பொங்கல், தீபாவளி என்று ஊருக்கு வாழ்த்து சொல்லுவதற்காக அதே தினங்களில் இவ்விசேட தினங்களை கொண்டாடுகின்றது.

வாக்கிய பஞ்சாங்கங்களின் தூணாக விளங்கும் கைலை நாகநாதக்குருக்கள் ஈஸ்ற்ஹாம் முருகன் கோவிலில் பிரதம குருக்களாக இருந்தும் அவ்வாலயம் ஏன் வேறொரு நாட்காட்டியை பின்பற்றுகின்றது என்பது விளங்கவில்லை.

மேலும் இவ்வாலயத்தின் அறங்காவலர் ஈழத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் அண்மையில் நடந்த தன் மகளின் திருமணத்தை கௌசிகரின் வாக்கிய பஞ்சாங்க நேரப்படி குறித்துக் கொண்டார். அக்குறித்த நேரம் இவர்கள் ஈஸ்ற்ஹாம் முருகன் கோவிலில் பயன்படுத்தும் மெய்கண்டான் கலண்டரின் நேரப்படி மரண யோகமாகவும் இருக்கலாம் என மனம் வருந்தினார்.


சைவமுன்னேற்றச்சங்கம் 26 வருட சேவையினால் இங்கிலாந்தில் சைவத்தை வளர்ந்தோங்க செய்ய வேண்டும் என்ற நோக்கில் செயற்படுகின்றனர். இவ்வமைப்பின் பிரமுகர்கள் பலருக்கு ஈஸ்ற்ஹாம் முருகன் கோவிலில் மதிப்பும் அந்தஸ்தும் இருந்தும் பொதுமக்களின் நாளாந்த வாழ்க்கையை பாதிக்கும் இவ்விடயத்தில் அக்கறையின்றி இருப்பது வேதனையானது.

இது பற்றி கற்பக விநாயகர் ஆலய பிரதமகுரு வசந்த குருக்களைக் கேட்ட போது "தைப்பொங்கல் ராசி பிரவேசத்துடன் கூடியது. சூரியன் அஸ்தமனமாவதற்குள் (மறைவதற்குள்) மகர ராசிக்குள் பிரவேசம் செய்தால் அன்றைய தினமே மகரசங்கிராந்தியும் பொங்கலும் வரும். இம்முறை லண்டனில் சூரிய மகரப்பிரவேசம் 14.01.2007 ஞாயிறு அன்று பகல் 12.38 ஆகும். எனவே அன்றைய தினமே பொங்கல் கொண்டாடப்பட்டிருக்க வேண்டும்

சிவராத்திரி திதி வியாபகத்துடன் கூடியது. நடுநிசியில் லிங்கோத்பவ காலத்தில் சதுர்த்தி திதி கூடி நிற்க வேண்டும். லண்டனில் 15.02.2007 இரவு 9.21 சதுர்த்தசி கூடி வெள்ளி இரவு 7.01 க்கு முடிவடைகிறது. எனவே வியாழக்கிழமை தான் சதுர்த்தசி திதியின் முழு வியாபகம் லிங்கோற்பவ காலத்தில் கூடியுள்ளது. லண்டனில் 15.02.2007 இரவு தான் மகாசிவராத்திரி கொண்டாடப்பட வேண்டும்" என்றார்.

இது பற்றி கற்பக விநாயகர் ஆலயத் தலைவர் கோபாலகிருஷ்ணனிடம் கருத்துக் கேட்ட போது "எமது ஆலயமும் பெரும்பான்மையான ஆலயங்கள் போல் இங்குள்ள நேரப்படி கணித்த வாக்கிய பஞ்சாங்கத்தையே பின்பற்றுகின்றது. கடந்த வருடம் சைவமுன்னேற்றச்சங்கம் எல்லா ஆலயங்களிலும் விசேட நாட்கள் ஒரே நாட்களில் கொண்டாடப்பட வேண்டும் என்று தொடங்கிய முயற்சியை கைவிட்டுவிடாமல் இச்சிக்கலுக்கு ஒரு தீர்வை ஏற்படுத்த வேண்டும். பக்தர்களுக்கு ஏற்படும் வீணான சிரமத்தை தவிர்க்க வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டார்.

## சோவியத் ஜனாதிபதி அமெரிக்கா மீது கண்டனம்




அமெரிக்கா ஏனைய உலக நாடுகளை ஆதிக்கம் செய்ய முனைவதாக சோவியத் ஜனாதிபதி விளாடிமீர் பூட்டின் (படம் - கீழ்) மூனிச்சில் இடம்பெறும் பாதுகாப்பு மாநாட்டில சாடியுள்ளார். வாஷிங்டனின் சர்வதேச உறவுகள் சம்பந்தமான 'மிகவும் ஆபத்தான' அணுகுமுறையானது உலகில் அணுவாயுதப் போட்டிக்கு தூபமிடுவதாக இவர் தெரிவித்துள்ளார். மேலும் உறுதியடையும் சோவியத்தின் நிலையையே இவ்வறிக்கை பிரதிபலிப்பதாக உள்ளது.



வெள்ளை மாளிகை சோவித் அதிபர் புட்டினின் இக்கண்டன உரை குறித்து ஆச்சரியத்தையும் ஏமாற்றத்தையும் வெளியிட்டு உள்ளது.


## அணுசக்தி எரிபொருள் விருத்திக்கு எமக்கு உரிமையுண்டு - ஈரானிய ஜனாதிபதி அறிவிப்பு



சர்வதேசவிதிகளுக்கு உட்பட்டு அணுசக்தி எரிபொருளை அபிவிருத்தி செய்வதற்கான உரிமை ஈரானுக்கு உண்டு என்று இரானிய ஜனாதிபதி மொகமட் அகமடின்யட் (படம்) பெப்ரவரி நடுப்பகுதியில் அறிவித்துள்ளார். 1979ல் ஈரானில் இடம்பெற்ற இஸ்லாமிய புரட்சியின் 29வது ஆண்டு நிறைவையொட்டி இடம்பெற்ற பொதுமக்கள் ஊர்வலமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவர் இதனைத் தெரிவித்தார். மேற்குநாடுகள் பேச்சுவார்த்தையென பொய்யான அழைப்புக்களை விடுத்து பின் ஈரான் யூரேனியம் விருத்தியை முதலில் நிறுத்தக்கோருவதாகவும் ஈரானிய ஜனாதிபதி குற்றம் சாட்டியுள்ளார்.

மூனிச்சில் நடைபெறும் பாதுகாப்பு மாநாட்டில் இவ்விவகாரம் முக்கிய இடத்தை வகிக்கவுள்ளது. அணுசக்திசம்பந்தமான சர்வதேச ஒப்பந்தமொன்றில் கையெழுத்துள்ள ஈரான் அவ்விதிகளுக்கமைய தனது அணுசக்தி நிலையங்களை சர்வதேச நிபுணர்கள் பார்வையிடுவதற்கு மறுப்புத் தெரிவித்து வருகிறது.

## பாலஸ்தீனத்தில் ஒருங்கிணைந்த அரசுக்கான சாத்தியம்




பதவி விலகி ஒருமைப்பாட்டுக்கு வழிவிட்டுள்ள பாலஸ்தீன பிரதமர் இஸ்மாயில் கானியா

கமாஸ் அமைப்பைச் சேர்ந்த பாலஸ்தீன பிரதமர் இஸ்மாயில் கானியா தமது பிரதமர் பதவியை இவ்வாரம் ராஜினாமா செய்துள்ளார். பற்றா அமைப்பைச் சேர்ந்த ஜனாதிபதி மகமொட் அப்பாஸ் புதிய தேசிய ஒருமைப்பாட்டு அரசொன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டதற்கிசைவாகவே இவரது ராஜீனாமா இடம்பெற்றுள்ளது.

இவ்விரு பகுதியினருக்குமிடையே தேசிய ஒருமைப்பாட்டு அரசாங்கம் அமைப்பது குறித்து இணக்கம் காணப்பட்டிருந்த போதிலும் சில முக்கிய விடயங்களில் இழுபறிநிலை இருந்தது. தற்போது பிரதமரின் இந்நடவடிக்கை முன்நோக்கி நகருவதற்கான ஆரம்பமாக உள்ளது. பாலஸ்தீனத்தில் கமாஸ், பற்றா குழுக்களுக்களுக்கிடையிலான மோதலில் கடந்த மூன்று மாதங்களில் 90க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

## அமெரிக்க செனட் புஸ்ற்கு கடிவாளம் போடுகிறது



அமெரிக்காவின் காங்கிரஸ் சபையில் பெரும்பான்மை வகிக்கும் ஜனநாயகக் கட்சி ஈரான் மீது யுத்தம் தொடுப்பதற்கு ஜனாதிபதி புஷ்சுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என எச்சரித்துள்ளது.

வெள்ளை மாளிகை உயரதிகாரிகளும் ஜனாதிபதி புஷ்சும் ஈரான் ஈராக்கிலுள்ள ஷியா கிளர்க்கியாளர்களுக்கு ஆயத விநியோகம் செய்வதாக குற்றம் சாட்டி வருகின்றனர். ஆனால் ஈரான் மீதான தாக்குதலுக்கான அத்திவார வேலைகளில் தாம் ஈடுபடவில்லையென புஷ் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஈராக்கில் அமெரிக்கத் துருப்புக்களின் தொகை அதிகரிக்கப் படுவதற்கு எதிராக காங்கிரஸில் ஜனநாயகக்கட்சியினர் வாக்களிக்க உள்ளனர்.



இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் செல்லும் போது பெப்ரவரி 18ல் ஏற்பட்ட இரு குண்டு வெடிப்புகளைத் தொடர்ந்து தீ விபத்துக்குள்ளான புகையிரதம். 60 பேர் வரைகொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

# ரெலோ தலைவர் - பா உ சிறிகந்தா லண்டனில் யாருக்கு போதிக்கிறார் ஜனநாயகம்




*ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்*


மக்களால் மக்களுக்கு மக்களே தெரிந்தெடுக்கும் ஒரு ஜனநாயக அமைப்புத்தான் பாராளுமன்ற அமைப்பு. அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மக்களின் நலத்திற்கும், முன்னேற்றத்திற்கான கல்வி பொருளாதார விடயங்களுக்கும் பணிசெய்வதுதான் மரபு. படித்தவர்கள் என்போர் பண்பானவர் என்பதும் பரவலான நம்பிக்கை.

“கற்க கசடற கற்க கற்பவை கற்றபின் நிற்க அதறுத் தக” என்கிறார் வள்ளுவர். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றவாதியான ந சிறிகாந்தா தனது கல்வியின் அற நெறிக்கப்பால் பாலியற் கொடுமை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒரு பிரமுகருக்குத் தன் படிப்பு, அந்தஸ்து அத்தனையும் முன்வைத்து வழக்காடுகிறார். பாராளுமன்றப் பணிகளைச்செய்வதும் பார்க்க பாலியற் கொடுமை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருத்தருக்கு வழக்காடுவதிற் பெயர்போனவர்.

2005ம் ஆண்டு (20.09.2005), யாழ்ப்பாணத்தில் நீதியரசர் திருமதி சிறிநிதி நந்தசேகரம் முன்னிலையில் ‘பொங்கு தமிழ்’ கனேசலிங்கம் என்று யாழ்ப்பாணத்தில் பிரபலமாகத் தெரியப்பட்ட யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் தங்கராசா கனேசலிங்கம், முள்ளையவளையைச்சேர்ந்த முத்தையா யோகேஸ்வரி என்ற பதின்மூன்று வயது வேலைக்காரப் பெண்ணைப் பாலியல் கொடுமை செய்த குற்றத்திற்காக ஆஜர் செய்யப்பட்டிருந்தார். சிறு வயதிலிருந்து கனேசலிங்கம் வீட்டில் வேலைக்காரியாய் இருந்த யோகேஸ்வரியை கனேசலிங்கம் நாற்பது தடவைகள் பாலியற் கொடுமை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இந்தச்செய்தி பத்திரிகையில் வெளிவந்தது. யாழ்ப்பாணத்திலுள்ள மனித உரிமைகள் ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு றமேடியஸ் என்பவர் யோகேஸ்வரிக்காக வழக்காடினார்.

சிறு வயதுப்பெண்ணை, அப்பாவிக் குழந்தையாக, உணவுக்கும் உடைக்கும் வேலைக்காரியாயத் தன் வீட்டில் உழைக்க வந்த அப்பாவியைக் களங்கம் செய்தவன் மனிதனாக இருக்க முடியாது.





மிருகங்கள் தங்களின் குட்டிகளைப் பலியற் கொடுமை செய்வதில்லை. மனிதன், அதிலும் இளம் தலைமுறைக்கு கல்வி என்ற செல்வத்தைக் கொடுப்பவன், எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்ற உன்னத நிலையில் இருப்பவன் செய்தான் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

யோகேஸ்வரிக்கு நடந்த கொடுமையை எதிர்த்து நூற்றுக்கணக்கான பொது மக்களும் மாணவர்களும் யாழ்ப்பாண நீதிமன்றத்திற்கு வந்து தங்கள் எதிர்ப்பைக் காட்டினார்கள். கணேசலிங்கத்திறகாக வாதாட ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சட்டத்தறிஞர்களான வினாயகமூர்த்தியும், ரவிராஜும் (அண்மையில் கொழும்பில் வைத்துக் கொலை செய்யப்பட்டவர்) பொது மக்களின் எதிர்ப்புக்கு முகம் கொடுக்க முடியாமல் வழக்கிலிருந்து வாபஸ் பெற்றுக்கொண்டார்கள். ‘காமுகனுக்குத் தண்டனை கொடு‘, ‘குற்றவாளி கணேசலிங்கத்திற்குத் தண்டனை கொடு‘ என்று நூற்றுக்கணக்கான யாழ்நகர்ப் பெண்கள் பதாகைகளுடன் 03.10.05ல் நீதி மன்றத்திற்கு முன்னால் கோஷம் எழுப்பினார்கள்.

மக்கள் சக்தி மகாக்சதி என்பதால் நீதியரசர் சிறிநிதி (இவர் தற்போது கொழும்பிற்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.) கணேசலிங்கத்திற்கு பிணை மறுத்தார். இப்போது அந்த இவ்வழக்கு கொழும்பு மேற்கோட்டில் பேசப்படவிருக்கிறது. ஒருவருடத்தைத் தாண்டிய பின்னும் அந்தக் வழக்கு இன்னும் கோர்ட்டுக்கு வரவில்லை. கணேசலிங்கத்திற்கு வழக்காடுபவர் சிறிகாந்தா. கணேசலிங்கம் பிணையில் விடப்பட்டிருக்கிறார். யோகேஸ்வரி இன்னும் பெண்கள் நல நிலையத்திலிருக்கிறார். மனித உரிமைகளுக்காக வாதாடி வரும் றமேடியஸ் இலங்கை இராணுவத்தினரால் படுமோசமாகத் தாக்கப்பட்டிருக்கிறார், இதுதான் இன்றைய இலங்கையில் நடைமுறையிலிருக்கும் ஜனநாயகம்!

சிறிகாந்தா ஜனநாயகம், பற்றிப்பேச லண்டன் வந்திருக்கிறார். 14.02.07ல் லண்டன் பல்கலைக்கழகத்தில் இலங்கையில் இருந்து வந்திருக்கும் இன்னுமொரு பேச்சாளரான டொக்டர் விக்கிரமபாகு கருணாரட்னவுடன் மேடையேறப்போகிறார். இவர் இடதுசாரி முன்னணியின் தலைவராவார்.

பதின்மூன்று வயதுப்பெண்ணை 40தடவைகள் பாலியற் கொடுமைசெய்து அவளைத் தற்கொலைக்கு முயலும் வரைக்கும் தூண்டிய குற்றத்தில் மாட்டுப்பட்டிருக்கும் ஒருத்தனுக்கு வழக்காடும் சிறிகாந்த் போன்றவர்களுக்கு ‘ஜனநாயகம்‘ பற்றிப்பேச ஏதும் அருகதை இருப்பதாகத் தெரியவில்லை. பதின்மூன்று வயது வேலைக்காரிக்கு மனித உரிமைகள் கிடையாதா? அவளுக்கு நடந்த கொடுமை மனித உரிமை மீறலாகாதா?

# இலங்கை அரசியலின் ஒரு தீர்க்கமான தலைவர்

*வீ தனபாலசிங்கம்*

*மார்க்சியகற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையம்.*

தோழர் நாகலிங்கம் சண்முகதாசன் (1919-1993) மார்க்சியம் - லெனினிசம் - மாஓசேதுங் சிந்தனையை புரட்சிகர நிலைப்பாட்டில் நின்று இறுதிவரை முன்னெடுத்து வந்த தலைமைப் போராளியான இவர் மறைந்து 14 வருடங்கள் கடந்துவிட்டன. இவர் 1993 பெப்ரவரி 8 இல் இங்கிலாந்தில் காலமானார்.

இலங்கையில் புரட்சிகர இயக்கத்துக்கு தோழர் சண்முகதாசன் செய்த பங்களிப்புகள் குறித்து அரசியல் சரித்திர வியலாளர்கள், மார்க்சியப் புத்திஜீவிகள் மற்றும் இடதுசாரி இயக்கத்தவர்கள் மத்தியில் இருந்து பல முனைகளில் வாதப்பிரதிவாதங்களும் சர்ச்சைகளும் மூண்டிருந்தன என்ற போதிலும் இந்நாட்டில் மாஓவாத இயக்கத்தை முன்னெடுத்து தலைமை தாங்கி வழிநடத்தியதில் அவர் ஆற்றிய முதன்மையான பங்களிப்பு குறித்து எந்த விதமான மறு கருத்துக்கும் இடமிருக்க முடியாது.

இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்ட (1943 ஜூலை 3) இருவார காலத்தில் பல்கலைக்கழகத்தில் தனது இறுதிப் பரீட்சையை எழுதி முடித்த கையோடு அக்கட்சியின் முழுநேர ஊழியனாக இணைந்த தோழர் சண்முகதாசனின் அரசியல் வாழ்வு இந்நாட்டின் கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் சமாந்தரமானதாகும்.

1960களின் ஆரம்பத்தில் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் மூண்ட மாபெரும் தத்துவார்த்தப் போராட்டத்தின் போது (மாஸ்கோ - பீக்கிங் பிளவின் போது) சீனத்தலைவர் மாஓ சேதுங்கின் வழிகாட்டலின் கீழ் அணிதிரண்ட சர்வதேச புரட்சிகர கம்யூனிஸ்ட் சக்திகளின் அணியில் தன்னை இணைத்துக் கொண்ட தோழர் சண்முகதாசன் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு வெளியேறி மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கினார்.

இலங்கையில் மிகவும் மதிக்கத்தக்க மார்க்சியப் புத்திஜீவியாகவும் புரட்சிகர கம்யூனிஸ்ட் வாதியாகவும் தொழிற்சங்க வாதியாகவும் விளங்கிய அவர் நாடு முழுவதும் இருந்த மார்க்சியப் புத்திஜீவிகள் பல சந்ததியினருக்கு அரசியல் ஆசானாகவும் அறிவுரையாளராகவும் செயற்பட்டு மார்க்சிய ஆய்வுமுறையின் வழியாக உலக நிகழ்வுகளை நோக்கி தெளிவுபெறும் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்தார்.

1960களின் ஆரம்பத்தில் இருந்து தொடர்ச்சியாகப் பல ஆண்டுகள் நாட்டின் பல பகுதிகளிலும் கொழும்பில் கம்யூனிஸ்ட் கட்சியினதும் தொழிற்சங்கத்தினதும் காரியாலயங்களிலும் அவரின் அரசியல் வகுப்புக்களுக்கு படையெடுத்தவர்களின் எண்ணிக்கை எமது காலத்தின் மகத்தான இயங்கியல்வாதிகளில் தோழர் சண்முகதாசன் முக்கியமானவர் என்பதற்கு ஒரு சான்று. இலங்கையின் வேறு எந்தவொரு இடதுசாரித் தலைவரையும் விட அவர் மார்க்சியம் - லெனினிசத்தின் அடிப்படைகளை மக்கள் மத்தியில் பரப்புவதற்கும் போதிப்பதற்கும் மிகக்கூடுதலான அளவுக்கு பங்களிப்புகளைச் செய்தவர் என்பது எவரும் நிராகரிக்க முடியாத அம்சமாகும்.

ரொட்ஸ்கியவாதம், சீர்திருத்தவாதம், நவீன திரிபுவாதம் ஆகியவற்றுக்கு எதிராக தோழர் சண்முகதாசன் நடத்திய இடையறாத விட்டுக்கொடுப்பற்ற தத்துவார்த்தப் போராட்டம் அவரது மகத்தான தகுதிகளில் ஒன்றாகும். இலங்கையின் எந்தவொரு ரொட்ஸ்கியவாதியுமே தத்துவார்த்த ரீதியான வாதங்களில் அவரை அண்மித்தது கூட கிடையாது. மாஸ்கோ சார்பினராக இருந்த கம்யூனிஸ்ட்டுக்கள் தோழர் சண்முகதாசனுடன் தத்துவார்த்த ரீதியான வாதப்பிரதிவாதங்களில் நேரடியாக ஈடுபடுவதை பெருமளவுக்கு அக்காலத்தில் தவிர்த்தே வந்தனர் எனலாம். அந்த வகையில் மார்க்சியப் போதனைகளை அவற்றின் அடிப்படை உணர்வுகளுடன் முன்னெடுப்பதிலும் தனது கட்சியின் தொண்டர்கள் அரசியல் ரீதியில் பெற்றிருக்க வேண்டிய தெளிவிலும் அவர் காட்டிய அக்கறை என்றென்றைக்கும் ஒரு முன்னுதாரணமாக கொள்ளக் கூடியதாகும்.

அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலம் தனது வாழ்க்கையை மார்க்சிய நெறிநின்ற அரசியலுக்காக அர்ப்பணித்த அவரின் போதனைகளும் அனுபவ



வாயிலாக அவரின் படிப்பினைகளும் தற்போதைய பின்னடைவு நிலையில் இருந்து கம்யூனிஸ்ட் இயக்கத்தை மீட்டெடுப்பதற்கான முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கும் என்பது நிச்சயம். எந்த நோக்கத்திற்காக தோழர் சண்முகதாசன் மார்க்சியக் கோட்பாட்டை தனது வாழ்வுடன் வரித்துக் கொண்டாரோ அதே நோக்கம் எதிர்காலத்தில் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதை உறுதிசெய்துகொள்வதற்கான பங்களிப்பை வழங்கும் ஒரு தளமாக அவரின் பெயரில் நிறுவப்பட்ட மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையம் மார்க்சிய ஆய்வுமுறையின் அடிப்படையிலான போதனைப் பணிகளை இன்றும் செய்துவருகிறது.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

# பாகிஸ்தானில் காணாமல் போவோர் அதிகரிப்பு

பாக்கிஸ்தானிய அரசுக்கு எதிராகச் செயற்படுவோர் திடீர் மறைவுக்குள்ளாவது அண்மைக்காலங்களில் அதிகரித்துள்ளது. 2001க்குப் பின்னர் 400க்கு மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளதாக பாக்கிஸ்தானின் சுதந்திர மனித உரிமை ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயதப் படையினரும், பாதுகாப்புத் துறையினரும், துணை இராணுவக் குழுக்களும் இக்கடத்தல்களில் ஈடுபட்டு உள்ளதாக முறைப்பாடுகள் கிட்டி உள்ளதாக அவ்வமைப்பின் செயலாளர் நாயகம் இக்பால் ஷைதர் தெரிவித்துள்ளார். காணாமல் போபவர்கள் போராளிகள் அல்லவென்றும் பலூச்சிஸ்தானில் அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் என்றும் ஆணைக்குழுவின் தலைவர் அஸ்மா ஜெகான்கீர் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்கள் சார்பாக உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பாக்கிஸ்தான் ஒரு செயற்படாத அரசாக மாறி உள்ளதாகவும் சட்டம் ஒழுங்கு முற்றாகப் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# குருக்களின் கொலைக்கு Hindu Council UK கடுமையான கண்டனம்

இலங்கையில் இராணுவத்தால் அக்கிரமிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பின் வாகரைக்குக் சென்றிருந்த ஜனாதிபித மஹிந்த ராஜபக்ஷவை பெப்ரவரி 7ல் வரவேற்று ஆசிர்வதிப்பதற்கென அரசபடையினரால் துப்பாக்கி முனையில் அழைத்துச் செல்லப்பட்ட இந்துமதகுரு பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இருந்தாலும் அதனைப் பிடிக்காதவர்கள் தனக்கு ஏதாவது செய்து விடுவார்கள் என்ற பயம் குருக்களின் மனதில் இருந்ததாக தெரியவருகிறது.

60 வயதான செல்லையா பரமேஸ்வரக் குருக்கள் வீட்டில் இருந்த வேளையில் அவருடன் உரையாடவென வந்த அடையாளம் தெரியாத நபர்கள் அவருடன் சில நிமிடங்கள் பேசியதாகவும் திடீரென துப்பாக்கிச் சத்தம் கேட்டதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அவரது உடலில் T56 ரக துப்பாக்கிச் சன்னங்கள் காணப்பட்டதாக விசாரணைகளில் இருந்து தெரிய வருகின்றது.



இக்கொலையை பிரித்தானிய இந்துக் கவுன்சில் வன்மையாகக் கண்டித்து உள்ளது. இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் புனிதமான மனிதரின் உயிர் பறிக்கப்பட்டு உள்ளது. இவ்வாறான செயல்களுக்கு மன்னிப்பே கிடையாது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஜனாதிபதியை வரவேற்பதற்கு அவர் விரும்பிச் சென்றிருக்கவில்லை.

வாகரையின் தென்பகுதியில் உள்ள சந்திவெளியில் மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையான இந்த மதகுருவின் வீடு அமைந்துள்ளது.

ஒரு இந்து மதகுருவின் அநியாயமான மறைவுக்கு எதிராக எவ்வித இந்து அமைப்புக்களும் வழமைபோல எதிர்ப்புக் குரல் எழுப்பவில்லை. பிரித்தானியாவில் ஈழத் தமிழர்களின் 20க்கும் மேற்பட்ட இந்து ஆலயங்கள் இருந்தும் அவையும் மௌனமாகவே உள்ளன.

கருத்தரங்கு

## தமிழ்–முஸ்லீம் இன உறவுகள்

Forest YMCA
642 Forest Rd
Walthamstow
London E17 3EF

சனிக்கிழமை
மார்ச் 10, 2007
மாலை 2:30 - 6:30

# மலேசிய இனக்கலவரத்தை எழுதியதமிழ் நூலுக்குத் தடை

மலேசிய எழுத்தாளர் கா.ஆறுமுகம் எழுதிய 'மார்ச் 8' என்ற தமிழ் நூலுக்கு மலேசிய அரசாங்கம் கடந்த 19.1.2007இல் தடைவிதித்துள்ளது. மலேசிய நூலியல் வரலாற்றில் தமிழ நூலொன்று பிரசுரம் பதிப்பகச் சட்டத்தின் கீழ் மலேசிய அரசினால் தடைவிதிக்கப்பட்டது இதுவே முதல்தடவையாகும்.

114 பக்கம் கொண்ட மார்ச் 8 கடந்த ஆண்டு ஏப்ரல் 8இல் செம்பருத்தி பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டது. 2001ம் ஆண்டு கம்பொங் மேடான் வட்டாரத்தில் மார்ச் 8 முதல் 23ம் திகதி வரை மலாய்க் காரர்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் இனவன்முறை தலைவிரித்தாடியது. அதில் 5 தமிழர்களும் 1 இந்தோனேசியரும் கொல்லப்பட்டனர். 90க்கும் அதிகமான தமிழர்கள் கடும் காயங்களுக்குள்ளாகினர். 1969 மே 13இல் இந்தோனேசியாவில் நிகழ்ந்த இனக்கலவரததிற்குப் பின்னர் நிகழ்ந்த மோசமான கலவரமாக இது வரலாற்றில் பதிவுபெற்றது. இவ்வரலாற்று நிகழ்வை ஆராய்வதாக மார்ச் 8 என்ற நூல் அமைந்துள்ளது. இது மலேசிய அரசின் கருத்துச் சுதந்திரத்தை மீறுவதாக உள்ளது.

# இலங்கையில் சிங்களப் பத்திரிகையாளர்கள் கடத்தல்

தமிழ்ப் பத்திரிகையாளர்கள், புத்தி ஜீவிகளைக் கடத்தி தமிழ் ஊடகத்தையும் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான குரல்களையும் அடக்க முயன்ற அரசும் தற்போது சிங்களப் பத்திரிகையாளர்களின் பக்கம் தங்கள் கவனத்தைத் திருப்பியுள்ளன. 'அகுண' என்ற சிங்களப் பத்திரிகையின் ஆசிரியர்களான மூன்று தொழிற்சங்கவாதிகள் அண்மையில் கடத்தப்பட்டுள்ளனர்.

தொழிற்சங்கத் தீலவிரவாதியான எம். ஏ.சிசிர பிரியங்கர, நிஹால் சேரசிங்க, புகையிரதத் தொழிற்சங்க பிரமுகர் லலித் செனவிரத்ன ஆகிய மூவருமே கடந்த பெப்ரவரி 5ம் திகதி இலங்கை பாதுகாப்புப் படையினரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிக்கக்கோரி நாடெங் கிலும் இருந்து கண்டனக்குரல்கள் எழுந்தவண்ணமுள்ளன. லண்டன் தமிழர் தகவல் நடுவம் இதனை வன்மையாகக் கண்டித்து உள்ளது.

ஆளும் வர்க்கம் தங்கள் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கான எல்ல அடாவடித்தனங்கிலும் ஈடுபட்டிருப்பதையே இது காட்டுவதாகவும் மூவின மக்களதும் இணைந்த போராட்டமே இவற்றுக்கான தீர்வுக்கு ஒரே வழியென்ற உணர்வும் தற்போது வலுவடைந்து வருவதாகவும் இடதுசாரிகள் கருத்து வெளியிட்டு உள்ளனர்.

# இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அமெரிக்க குழு

இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை முடுக்கிவிட அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் சிறப்புக் குழவொன்றினை நியமிக்க இருக்கிறார். இலங்கையில் அதிகரித்துச் செல்லும் கடத்தல்கள், படுகொலைலகளை தடுத்து நிறுத்தும் வகையிலும், சர்வதேச அரங்கில் தனது தலைமைத்துவத்தை உறுதிசெய்யும் வகையிலும் இத்தலையீட அவசியமாகின்றது என நியு ஜேர்சி ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதி Rush Holt ஜோர்ஜ் புஷ்ஷிற்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளதாக AFP செய்திஸ்தாபனம் பெப்ரவரி 6ல் செய்தி வெளியிட்டுள்ளது.


"We are writing to urge you to appoint a special envoy for Sri Lanka because we are deeply troubled by the ever-worsening situation on the ground there." என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்குழவில் இடம்பெறும் உயர் அதிகாரிகள் ஜனாதிபதி புஷ்சுடனும் கொண்டொலிசா ரைசுடனும் நேரடியான நெருங்கிய தொடர்பினைக் கொண்டவர்களாகவே இருப்பர் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

# லண்டன் தொகுப்பு: நூல்தேட்டம் தொகுதி 4 கொழும்பில் வெளியீடு

நூலகவியலாளர் என்.செல்வராஜா லண்டனிலிருந்து தொகுத்துவரும் நூல்தேட்டம் என்ற ஈழத்துத் தமிழ் நூல்விபரப்பட்டியலின் நான்காவது தொகுதி பெப்ரவரி 2007இல் கொழும்பில் வெளியிடப்பட்டுள்ளது. நான்காவது தொகுதியுடன் ஈழத்துத் தமிழ்நூல்களில் 4000 நூல்கள் குறிப்புரையுடன் கூடியதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஈழத்து நூல்கள் அனைத்தையும் துறைவாரியாகப் பகுத்துத் தொகுக்கும் முதல் முயற்சி நூல்தேட்டத்தின் வாயிலாகவே நடந்துள்ளது. 540 பக்கம் கொண்ட நான்காவது தொகுதியில் 1000 நூல்கள் பதிவுக்குள்ளாகியுள்ளன. இலங்கையிலும் புலம்பெயர்ந்தும் வாழும் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களது நூல்களை பதிவாக்கும் இந்தப் பாரிய முயற்சியில் நூலகவியலாளர் என். செல்வராஜா 2000ம் ஆண்டு முதல் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்.

ஈழத்துத் தமிழ் இலக்கியம் பற்றியும், நூலியல்துறை பற்றியும் ஐ.பீ.சீ. தமிழ் வானொலியில் 2002ம் ஆண்டு மே மாதம் முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலைக் கலசம் நிகழ்ச்சியில் இவரது நீண்ட ஆய்வுரைகள் இடம்பெற்று வருகின்றன.




என். செல்வராஜா

உண்மைகள் உறங்குவதில்லை.

# நீங்கள் உங்கள் நாட்டுக்கு திரும்பிச் செல்வதைப் பற்றி எண்ணுகிறீர்களா ? எங்களுடன் பேசுங்கள்.

## எங்களால் உங்களுக்கு உதவ முடியும்.

- ☐ நாங்கள் உங்கள் விமானச் சீட்டைப் பெற்றுத் தருவோம்
- ☐ நாங்கள் உங்களுக்கு இங்கும் அங்கும் ஏற்படும் உள்நாட்டு பயணச் செலவை வழங்குவோம்
- ☐ நாங்கள் உங்களுக்கு வேண்டிய பயண ஆவணங்களைப் பெற்றுத்தர உதவுவோம்
- ☐ நாங்கள் உங்களை வழியனுப்பி வைப்பதிலும் வரவேற்பதிலும் உதவுவோம்

## தஞ்சம்கோரியோர்

யூகே இல் இருந்து உங்கள் நாட்டிற்கு சுயவிருப்பில் திரும்பிச் செல்வதற்கு

## 31 மே 2007


திகதிக்கு முன் விண்ணப்பித்தால்

## £3500

பெறுமதியான மீள்இணைவு உதவியை திரும்பும் ஒவ்வொருவரும் பெறமுடியும்.

முக்கிய குறிப்பு : யூன் 2007ல் விண்ணப்பித்தால் இந்த உதவித் தொகை £2500 ஆக குறைக்கப்படும். யூன் 2007க்கு பின் வரை காத்திருந்து விண்ணப்பித்தால் உங்களுக்கு வழமையான ஒருவருக்கு £1000 பெறுமதியான மீள்இணைவு உதவி மட்டுமே கிடைக்கும்.

மேலதிக விபரங்களுக்கு ஐ ஓ எம் இன் இலவச தொலைபேசி இலக்கத்திற்கு அழையுங்கள் 0800 783 2332



ஐ ஓ எம் ஒரு சுயாதீன சர்வதேச அமைப்பு. இது பிரித்தானிய அரசின் ஒரு பிரிவல்ல.
நீங்கள் விரும்பினால் மட்டுமே, நீங்கள் உங்கள் நாட்டுக்குத் திரும்பிச் செல்ல நாங்கள் உதவுவோம்.

IOM International Orgnization for Migration
0800 783 2332 - www.iomlondon.org

This programme is co-funded by the European Refugee Fund

21 Westminister Palace Gardens
Artillery Row, London SW1P 1RR
Tel: 020 7233 0001
Fax: 020 7233 3001
www.iomlondon.org